உ

கணபதி துணை.

© சிவகெங்கை சமஸ்தானம்

பாகைமாநகரத்தி லெழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ புல்வர் நாயகியம்மன் பேரில்

## பதிகம், திருத்தாண்டகம், பஞ்சரத்தினப்பதிகம்.

ஸ்ரீ சிவசுப்ரமணியக்கடவுள் பேரில்

## ஆசிரியவிருத்தம், பஜனைக்கீர்த்தனங்கள்

இவைகள் அடங்கியிருக்கின்றன.

---

இஃது

ஷை சமஸ்தான வித்வான்

சரவணப்புலவர் அவர்களுக்கு

இரண்டாவது பௌத்திரனும்

நகரம்பட்டி

இராமலிங்க ஜோதிஷர் அவர்களுக்கு

புத்திரனுமான

வித்வான்

ஷண்முகக்கவிராயரவர்களால்

இயற்றப்பெற்றது.

---

... பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது

1925 [Copy Right.

G25:38.2119SPA
N25
128889

உ

கணபதி துணை.

© சிவகெங்கை சமஸ்தானம்

பாகைமாநகரத்தி லெழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ புல்வநாயகியம்மன் பேரில்

## பதிகம், திருத்தாண்டகம், பஞ்சரத்தினப்பதிகம்.

ஸ்ரீ சிவசுப்ரமண்யக்கடவுள் பேரில்

ஆசிரியவிருத்தம், பஜனைக்கீர்த்தனங்கள்

இவைகள் அடங்கியிருக்கின்றன

இஃது

ஷை சமஸ்தான வித்வான்

சரவணப்புலவர் அவர்களுக்கு

இரண்டாவது பௌத்திரனும்

நகரம்பட்டி

இராமலிங்க ஜோதிஷர் அவர்களுக்கு

புத்திரனுமான

வித்வான்

ஷண்முகக்கவிராயரவர்களால்

இயற்றப்பெற்றது.

மதுரை ஷம்ஸியா பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது

1925

இராமநாதபுரம் ராஜாஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
## சிவஞானம் பிள்ளை அவர்களியற்றிய
அறுசீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்ட சிவகெங்கை நாட்டினுறை தென்பாகை
செழித்தே யோங்க
நீர்கொண்ட மேகமெனுங் கண்ணனுக்கோர் தங்கையென
நிலவும் புல்வாயப்
பேர்கொண்ட தேவியற்குஞ் செவ்வேட்கும் நற்பதிகம்
பிறங்கச்சொன்னான்
ஏர்கொண்ட விராமலிங்கன் நற்றவனாஞ் சண்முகப்பே
ரிசைவல் லோனே.

இராமநாதபுரம் ராஜாஸ்கூல் தமிழ்பண்டிதர்
## வித்வான் கேசவ ராமசாமி அவர்கள் இயற்றிய
அறுசீர்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

பூமணக்கும் பொழிலார்ந்து பல்வளத்தாற் புனிதமுறு
போக பாகைத்
தேமணக்குங் குழலிபுல்வாய் நாயகிமேற் றிருப்பதிகந்
தேர்ந்து சொன்னான்
பாமணக்குந் தனித்தமிழிற் பயின்றபெரும் ஷண்முகனும்
பாருள்ளோர்கள்
நாமணக்குஞ்சோதிடத்தான் ராமலிங்கனயந்துபெற்ற
நாவலோனே.

இராமநாதபுரம் வித்வான்
## கோ. சுந்தரஞ்செட்டியாரவர்கள் இயற்றிய
அறுசீர்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

பேரளிக்கும் பெருந்தகைய குமரனுக்கு மாசையினாற்
பிறங்க யாண்டும்
ஏரளிக்கும் புலவர்மனத் தகமகிழச் சண்முகனு
மினிதே யாய்ந்து
காரளிக்கும் பாகைநகர் அம்பிகைக்கு மேபதிகங்
கவினச் சொன்னான்
சீரளிக்கு முலகதனில் ராமலிங்கம் வேட்டதவத்
தெய்தி னோனே.

நகரம்பட்டி மலையாண்டிக்கவிஞர் அவர்கள் பவுத்திரனும்
செந்திவேற்கவிஞர் புத்திரனுமாகிய ஸ்ரீமான் அருட்கவி
சோதிடம் முத்தையாப் புலவரவர்கள் இயற்றிய
அறுசீர்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

---

அழகுவரி யாற்றுமலர் குழலிதிருப் பாகையிற்புல்
லாத்தான் மீது
கிழமகல்கோ கிலமனைய யிசைப்பதிக மெவர்செவிக்குங்
கேட்கக் கேட்க
விழிசொலிலா மற்புகன்று னிப்பாகைப் பாமாவென்
றிமையோ ரேற்றி
வழிமுறைகண் டுவப்புறச்சண் முகக்கவிஞ னுமிவனன்
மதிமிக் கோனே

## அவையடக்கம்.

விண்ணோங்கு மாபொழில்சூழ் பாகைநக ரெஞ்ஞான்றும்
விளங்க மேலாந்
தண்ணோங்குந் திருநோக்கந் தரசிருக்கும் புல்வாய்மேற்
றனிப் பாயாலே
மண்ணோங்கு குமரன்மேற் பதிகமொடு கீர்த்தனங்கள்
பாடி னேனல்
மண்ணோங்கும் புலவரிதிற் குற்றங்கொள்ளாரினிதே
மகிழ்ந்து கொள்வார்.

காமேவு மாங்கனிக்குக் குயிற்றெருகு திகாக்கை
கனிகருதும் வேம்பிற்
றேமேவு மலர்தேடும் வண்டுமுருள் வண்டுமலந்
தேடு மாப்போல்
பூமேவு தமிழ்கவியிற் குற்றமெங்கே யெனச்சிறியர்
புகுந் தாராய்வர்
பாமேவு மேலோர்பாச் சுவையன்றித் தேடுவரோ
பழுதி லாரே.

---

உ

சிவமயம்.

## ஸ்ரீ புல்வா நாயகியம்மன்பேரில்

# பதிகம்.

### வெண்பா.

புக்தி தருந் தென்பாசைப் புல்வாய் மீதிற்சிறந்த
பத்தி தருந் தேன்பதிகம் பாடவே — தத்திலுயர்
கானமத்த யானைமுகத்தானை நற்றடக்கை யோனைந்
தானை மனத்தூடு நினைத்தால்

முத்திக்கு வித்தாகி முப்பொருளதாய் நின்ற
மூலபஞ் சாக்ஷரத்தாண்
மோனமாய் ஞானமாய் முச்சுடரி னுச்சியாய்
முக்கோண வட்டமதிலே
சித்திகருமொளியாகி யொளிவுக்குளொளிவான
சின்மய சிவானந்தியாய்
திரிபுரசௌவுந்தரி மகேஸ்வரி மனோன்மணி
சிவகாமி ஜெயகௌரியாய்
யெத்திக்கி னும்நிறைந் தோங்குமென் னம்மையே
யீசுபர மிரண்டி னுக்கும்
இறைவிமா பைரவி வராகி வோங்காரியே
யேகமாய் நின்றருள்செய்வாய்
வத்திடா தோங்கும்நற் கருணைமா வாரியே
வறுமையது தீர்த்தாளுவாய்
மகமுனிவர் புகழ்பாசை நகர்மகிழ வருள் மேவு
மாதுபுல்வா யம்மையே (1)

அகரமுத லாகியே யறிவாகி யறிவுக்கு
ளானந்த மாகிமுடிவில்
ஆதியாய் நீதியா யருளுக்கு ளுருவா
யகண்டபர வெளியுமாகிப்

பகருதற் கரியவே தாந்தசித் தாந்தமாய்ப்
பஞ்சாக்ஷரத் தியாகிப்
பகலாகி யிரவாகிப் பகலிரவ லாததாய்ப்
பரவெளித் தோற்றபதிலே
செகமாகி யகமாகி யுருவமொடு பூதமாய்ச்
ஜீவஜீ வாதியான
திகழ்சத்த மும்பரிச ரூபரச கந்தமொடு
சிவசத்தி யாகநிற்கும்
மகமேவு பக்த ரக்ஷகியான வம்மைநின்
மகிமையான் சொல்லவெளிதோ
மகமுனிவர் புகழ்பாகை நகர்மகிழ வருண்மேவு
மாதுபுல்வா யம்மையே (2)

கனகநிறை குன்றமே ரத்னமா தீபமே
கருணைவா ரிதியினமுதே
காமதேனே கற்ப கத்தரு நிதியமே
கனத்த மாணிக்கமயிலே
பனகமணியே வனப் பூம்பசுங் கிள்ளையே
பக்தருக் குற்றமுகிலே
பாலொடு திரண்டபா கென்னமா மறைவந்த
பழமுறுபெருந் தகைமையே
தினகர சொரூபியருள் சேர்ந்தவர்க் கிய்ந்தே
சிறந்தமா கைவல்யமே
தேனருவியே திவ்ய ஞானஉருவே யமரர்
தேடுதற் கரியதாயே
வனவரியி னிசைபரவு பத்மபத வம்பிகா
வறுமையது தீர்த்தாளுவாய்
மகமுனிவர் புகழ்பாகை நகர்மகிழ வருண்மேவு
மாதுபுல்வா யம்மையே (3)

மாதா பிதாவாகி நீயிருக்கச் சேய்
வருந்தலா மாபுவியிலே

வருகால மிக்கசெல் காலம்நிகழ் காலமறி
வண்மைத் தயாளமுடையா
ளீதா னெனப்புகலு மேதயரிய வேதங்க
ளினிலந் தனிலெனக்கு
நெறியுன்னை யன்றியே கதிவேறு மில்லையால்
நிலைமையினை நீதெரிந்துஞ்
சூதா யிருப்பதென் னீதமா யாலும்நின்
றொண்டரிற் றொண்டனலனோ
தொல்வினையை நீக்கியே நல்வர மளித்தலந்
தோவுனக் கரிதல்லவே
வாதாக நீநினைக் காதுள மிரங்கியெனை
வாழ்விப்ப துன்பரங்காண்
மகமுனிவர் புகழ்பாகை நகர்மகிழ வருண்மேவு
மாதுபுல்வா யம்மையே (4)

ஆலமதை யுண்டிந்ர னுதியைக் கார்த்தருள்செ
யனவரத கருணைமுதல்வி
அண்ட கோடிகளெங்கி னும்புகழ் விளங்குமறை
யாதியஷ்டா க்ஷரத்தி
மாலவன் சோதரி தயாபரி சர்வேஸ்வரி
மரகத சொரூபிவிமலி
மலைவல்லி யுமைபார்வதி சத்தி சாம்பவி
மாதங்கி யோங்காரணி
காலகாலி கஜமுகன் கந்தனைத் தந்த
கர்த்த தத்துவசுந்தரி
கருதரிய சித்தர்தொழு மாணைவலம் வைத்தொளிர்
கபாலி திரிசூலினீலி
வாலையபி ராமிநா ரணிவரத கல்யாணி
வாமிசிவ காமியென்றே
மகமுனிவர் புகழ்பாகை நகர்மகிழ வருண்மேவு
மாதுபுல்வா யம்மையே (5)

சுத்த பூரணிபுவன ரக்ஷகி மகத்வமாய்த்
தோன்றுதிரி யக்கரத்தி

தூயசத் திப்பரம ஓங்கார சத்திசா
துரியதுரியா தீதமாய்ப்
பத்தர் கொண்டாடும் பராசக்தி யம்பிகை
பவானி பாசாங்குசசக்தி
பரமேஸ்வரி சர்வ ஜீவர்கள் தயாபரி
பரப்ரம்ம சொரூபிஞான
வித்தகி முத்திதரு முத்தமி அத்துவித
விமலி கமலப்பதத்தி
வேதாந்த மீதிலே நாதாந்த மயமாய்
விளங்கு மாலைக்கழுத்தி
மத்தகரி யுரிசுற்று சித்தர்தனை நத்தி
வளர்ந்தபூங் கனதனத்தி
மகமுனிவர் புகழ்பாகை நகர்மகிழ வருண் மேவு
மாதுபுல்வா யம்மையே (6)

ஐந்தட் சரப்பொருட் காதார முதல்விநீ
அருமறையி னடிமுடி யுநீ
ஆதிநீ சோதிநீ ஆவிநீ காயம்நீ
அறிவுக்கு ளாரறிவும்நீ
தந்தைநீ தாயும்நீ சகலகலை வல்லிநீ
சர்வாதிதப் பொருளும்நீ
சாலோக முதலான நான்கையும் பாங்குடன்
றந்தருளு மதிகாரிநீ
முந்து ஞானந்திக முனந்தநாமங் கொண்ட
முக்கண்ணி சாமளையும்நீ
முற்பெருந் தெய்வம்நீ முப்பொருளும்நீ யதில்
முதற்பொருளு மானவளும்நீ
மந்திர சொரூபிநீ இந்தொடா வருகுநதி
மாமுடி யணிந்தவளும்நீ
மகமுனிவர் புகழ்பாகை நகர்மகிழ வருண்மேவு
மாதுபுல்வா யம்மையே (7)

சிற்றம் பலத்திலை னோடாடு கன்னிநீ
தேசோ மயானந்திநீ

சிங்கா சனத்திநீ திருமாது பாமாது
தினம்வணங்குந் தேவிநீ
பொற்றடங் கிரிராஜ புதல்வியாய் வந்தருட்
போதப்பெருஞ் செல்விநீ
பூரணீ காரணீ யபிராமி நீநல்ல
புண்ணியம் வளர்த்தவளும்நீ
குற்றமில் லாதஓம் பிரணவ சொரூபிநீ
குஞ்சர முகத்தவனையுங்
குகனையுங் குமரனுய்க் கொஞ்சி விளையாடியுங்
குமரிச் சிறப்புடையணீ
மற்றுமன் பர்க்குதவு மம்மைநீயே யெனது
வறுமையது தீர்த்தாளுவாய்
மகமுனிவர் புகழ்பாகை நகர்மகிழ வருண்மேவு
மாது புல்வாயம்மையே (8)

திருமலர்த் தாள்புவிக் காதார மென்றெனது
சித்தத்தி லுறுதிகொண்டேன்
சிவபரா சத்திநின் னரியபல நாமஞ்
சிறந்தமறை யென்றறிந்தேன்
அருமையா மூலகாதி புவனங்களெங்கினு
மார்ந்துவளர் சீவருக்கே
யானகொழு கொம்புநீ யாமென்ப தன்மையே
அம்மம்மநின் மகிமையைப்
பெருமைபெறு சேடனுஞ் சொலவஞ்சி லறிவிலாப்
பேதையேன் சொல்வைசமோ
பிஞ்ஞகனி டந்தங்கி யவனிருகண் மணியாய்ப்
பிறங்கு கருணைநதியே
மருமலர்ச் செண்பகக் காடேந்து கோதையே
மட்டிலா வாழ்வருளுவாய்
மகமுனிவர் புகழ்பாகை நகர்மகிழ வருண்மேவு
மாதுபுல்வா யம்மையே (9)

அன்புகொண் டுன்னடியை மறவாத பேரின்ப
வடியவர்களுறவுவேண்டும்

அணுவும்நின் பதம்நினைக் காவசட ருறவணுவி
லணுவுமணு காமைவேண்டும்
நின்பொன் னடிக்கன்பு நித்தம்வேண்டுந் தீமை
நினையா திருக்கவேண்டும்
நிறைவேண்டும் நன்மனப் பொறைவேண்டு மெற்குணரு
ணீங்காது நிற்கவேண்டும்
துன்பந் தருங்கலி தொலையவே வேண்டுமதி
தொலையா திருத்தல்வேண்டும்
தூய்மை வேண்டுமநல்ல வாய்மைவேண்டும் பொலாத்
துர்மனத் துர்வினையொடும்
வன்பிணியி லாமைவேண் டும்வாழ்வு வேண்டுமிவ்
வரமெனக் குதவுமம்மா
மகமுனிவர் புகழ்பாகை நகர்மகிழ வருண் மேவு
மாதுபுல்வா யம்மையே (10)

## திருத்தாண்டகம்.

செங்கமலத் திசைமுகனுங் கரியமாலுந்
தேடுதற்கெட் டாப்பொருளாய்ச் சிறந்துஞானந்
தங்கிடுநற் றிவுருவ வடிவார்க்கோங்குஞ்
சங்கரனுக் கோர்பங்கே சகத்தோர்வாழ்த்துங்
கொங்குநிறைப் பூங்கொடியே பொன்னார்மேனிக்
கோமளமே தேமதுரக் குன்றேயெங்கள்
அங்கௌரி அந்தரிதென் பாகைப்புல்வா
யம்பிகையே வந்தெனைக்காத் தருள்செய்வாயே

பாராதி யண்டமெலாந் தானேயாகிப்
பல்லுயிராய்ப் பலகோடி பூதபேத
பேரான பொருளாகி யருவுமாகிப்
பேசுகின்ற வறுசமையப் பிறிவுக்குள்ளே
நேரான சத்திசிவ மாகிநின்ற
நிர்மயமே யெற்குறுதி நீயல்லால்வே
றுராமென் னம்மையாம் பாகைப்புல்வா
யம்பிகையே வந்தெனைக்காத் தருள்செய்வாயே

1788

இரும்புவனத் தோர்பணியக் கருணைபொங்கும்
இறைவியே யென்னமையே யென்னுயிரன்பே
அரும்புநா னின்னரும்பொற் கமலமேவுந்
துணையடிக்கீட் டொண்டனெனத் தூயசேவை
விரும்பினேனெனக்குதவு வாய்வேதாந்த
மெய்ப்பொருளே கற்பகமே விளங்குஞானத்
தரும்பொன்னே தாயேதென் பாகைப்புல்வா
யம்பிகையே வந்தெனைக்காத் தருள்செய்வாயே

முக்கண்ணி திரிபுரசுந்தரி மாதங்கி
முதுமறைக்கு மெட்டாத மோனஞானி
திக்கெங்குந் திவ்யவருட் டிறத்தைகாட்டுந்
திரிசூலி யிமயவரைச் செல்விமேலாந்
தக்கனுக்குந் தனிமகவா யுதித்தவெங்கள்
சாம்பவி பஞ்சாக்ஷரத்தி சகந்தன்னில்லஞ்
சக்கரற்கு முதல்வியாம் பாகைப்புல்வா
யம்பிகையே வந்தெனைக்காத் தருள்செய்வாயே

மந்திரத்து ளாதியாய் மாசிலாதாய்
வளருருவாயுயிர்க்குயிராய் வழுத்தவொண்ணுத்
தந்திரமா மிகபரமா யீறிலாத
தனிப்பொருளா யெவ்வுலகுந் தாங்கப்பெற்ற
சுந்தரியா யபிராமி வாலைத்தாயாய்ச்
சொல்லுதற்கு முடிவிலாச் சுருதிபோற்றும்
அந்தரியா யமர்ந்தோங்கும் பாகைப்புல்வா
யம்பிகையே வந்தெனைக்காத் தருள்செய்வாயே

பொற்பீடம் பொலிவுறு ரீங்காசனத்தி
பூண்கழுத்தி புவியனைத்தும் புரக்குஞ்சத்தி
முப்போழ்தும் நினைப்பரிதை யாசனத்தி
மூடருக்குத் தோன்றாத முழுச்சமர்த்தி
கற்பாருஞ் சிவசத்தி நேத்தியான
கனதனத்தி கணபணகங் கணத்தினாய
வப்பூருஞ் சிகைப்பரத்தி பாகைப்புல்வா
யம்பிகையே வந்தெனைக்காத் தருள்செய்வாயே

கஞ்சமலர்த் திருப்பதத்தி கரவிலாச்செங்
கரதலைத்தி மரகதத்தி கருணையோங்கும்
பஞ்செழுத்திற் காதார பரமசத்தி
பனிமதியைத் தனிநதியைப் பணியைச்சூடுந்
தஞ்சடைச்சி மேலாமஷ் டாக்ஷரத்தி
தாயே பாசாங்குசத்தி தஞ்சமென்றோர்க்
கஞ்சலென்றி னலைத்தவிர்க்கும் பாகைப்புல்வா
யம்பிகையே வந்தெனைக்காத் தருள்செய்வாயே

பொருப்பரயன் திருமகளாய் வந்தாய்போற்றி
புலியதளைக் கரியுரியைப் போத்துமெங்க
டிருப்பானை வலத்தமைத்த தேனேபோற்றி
திரிபுரந்தீ யெழச்சிரித்த செயமேபோற்றி
விருப்பமோ டுனைப்பணிந்து வேண்டினோர்க்கு
வினைதீர்த்தும் பதமளிக்க விழைவாய்போற்றி
அருட்பொழியும் பதம்போற்றி பாகைப்புல்வா
யம்பிகையே வந்தெனைக்காத் தருள்செய்வாயே

காருலவும் பூமிக்கோர் கமலம்போலுங்
கண்ணாடு கேரளசிங்கப் பேர்நாடு
சீருலவுந் தேனாடு தெருணாடான
திருநாடு தனிமேலத் திருத்திநாடு
வீரியஞ்சே ரொன்னலரைச் செயித்தநாடு
விறல்நாடு விளைநாடிம் மேலாம்நாட்டிற்
காருருவ மாய்விளங்கும் பாகைப்புல்வா
யம்பிகையே வந்தெனைக்காத் தருள்செய்வாயே

கன்னல்செறிந் தெழில் கொளுந்தேன் கழனிநாடு
காண்டகுசீர் தனிவாய்மை கருதும்நாடு
நின்னடியை யெஞ்ஞான்றும் நினைக்கும்நாடு
நீடூழி நிலைநாடு நீதிநாடு
மன்னுரவோர் புகழும்வாட் கோட்டைநாடு
மாகவிஞர்க் கருணாடு மாண்பார்நாட்டிற்
கன்னியா யமர்ந்திலகும் பாகைப்புல்வா
யம்பிகையே வந்தெனைக்காத் தருள்செய்வாயே

## ஸ்ரீ புல்வாநாயகியம்மன்பேரில்
### பஞ்சரத்தினப் பதிகம்.

புனைதரள மணிமகுட முடியுநில வெழுமழகு
பொலிவதன முகமுநனி கார்
பொழிகுழலு மிருகுழையு மொருநுதலி னழகுமிகு
புகழ்கருணை விழியுமடி யார்
நினைதலரு ளிறைவியற நிதிபெருக வுதவியவொ
ணிறைகொடிகொ ளபயகரமும்
நிகரறுமெ யணிகளப புழுகொழுகு கனதனமு
நினதுதணி யிடையினழகும்
வனைதலுறு மழவிடைநி மலனைவல மிடுபுனித
வடிவுமறை யயனரிய மால்
வரரமர முனிவரிரு டிகளுரக ரடிபணிய
மகிமைதரு சுயசொருப மாய்
கனைதருவி ணூறவுலவு பொழிலுநிறை வளைபுரனு
கமலதட மதுநிலவு பா
கையிலிலகு விமலியெமை யுயுநெறியி லொழுகவமை
கைலைவரை யுறைபுலமைமேய. (1)

நீடுந் திருப்புவன மேழுங் கடற்றிரையி
னீருந் திசைக்களிறு மாய்
நேருங்கடக்கிரியு மேதண்ட சுற்றுமவ
னோதுங்க சக்ர கிரியும்
தேடும்பொன் மற்றுமுல காதிங்க முக்ரவட
ஷேயுங் குறிக்கிலமை நின்
சீருந் தியிற்றிகழு மாதுங்க தற்பர
சிவானந்தி சக்தி நினையே
பாடுந் திறத்னதாக மோடென் கருத்திலருள்
பாய்கெண்டை யொத்த விழியாய்
பாரண்டர் மிக்கதி தாவென்றொலிக்கவிரு
பானின்று முக்கர் தொழவே
ஆடும் பதத்திபணி மாகங் கணைத்தியரு
ளாரஞ் செழுத்தி னுருவா

மானந்த வித்தகி புல்வாயம்பிகைக் கௌவுரி
யாய்வந் துதிக்க வுமையே (2)

நாதப்ர மத்திலரு வாகித்த னித்துருவ
நாமப்ர சித்த நிலையாய்
ஞாலத் துதித்தவுமை யேபத்தர் கட்கினிய
ஞானக் கருப்பி ரசமே
நீதப் பரத்திமேலி யாகற் றனத்தியிக
னேருற்ற முற்பு னகையா
னீண் முப் புரத்தைதயழ னீறிட்ட மெய்ப்பரம
னேயக் கிழத்தி புகழ்மா
வேதப் ரியத்தி நினை நாடிக் கருத்துருகி
மேவித் துதிக்க வமையா
வீணிப் பிறப்பெனுமி மாயக் கடற்குளெனை
வீழப் பணித்த னலமோ
வாதைத் தவிர்த்தடிமை மீதிற் குறித்தருள்வை
மாசற் குணத்த மணியே
மாமுத்தர் சித்தர்பணி பாதைத் தலைத்துறுபுல்
வாய் நற்றிருக் கௌவுரியே (3)

தாலத்திலே விழிகள் வேலொத்த மாதர்புரி
சாலத்தி லாடு மனமுற்
சாகத்தி லேயெனவி வேகத்தி லேசெய
சாரத்தி லேவளமை யாஞ்
சீலத்தி லேதுமறி யார்நட்பி லேகயவர்
சேமத்தி லேயறிவிலே
சீர்பெற்ற காரிகை நனூல்கற்று மாகவிசொல்
தீரற்கு மேது முதவார்
காலத்தி லேபலர னீதத்திலேசொல் விப
காரத்தி லேகலியகங்
காரத்தி லேமெலிதல் யானுற்று மானமுரு
காவிப் பூமீ துழல்வனோ
பாலொத்த நீகருணை பாலித்து வாழ்வுதரு
பான்மைக் கிதே தருணமே.

பாகைக்கொள் சிலர்பணி வாகைத்தன் மலேயணி
பாகைப்புல் வாயமணியே (4)

மாகனக மேருறையு மாபதி குலாவுமுமை
மாதென விணோர் பணியவும்
வாசபவ நாசகருணைகரி கபாலியென
மாதவர்க ளோதி வரவும்
கோகனக மாதுகலேமாது நிலமாதனருள்
கோல்வடி சேவை செயவுங்
கூறுதுதி மேவுமடி யார்கள்பெரி யோர்கள்பல
கூடிமறை கோஷமிடவும்
பாகென விலாசசது ரானகவி மாலேகொடு
பாவலர்க ணோர் புகழவும்
பானுபல கோடிநிக ராமிரத மாபவனி
பாரில்வரு சீருறை செயில்
வேகமிகு சேடனுரை யாலுமுடி யாதிகனே
வேறுருவ ரோத வசமோ
மேகமொடு லாவுபனி மாபொழில்கொள் பாகைதனில்
மேவியபுல் வாயமணியே (5)

## ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுள்மீது ஆசிரிய விருத்தம்.

ஆரணங் கட்டையென சூடுசெம் பொற்பகமு
மார்திறம் பெற்றபுயமோ
டாறிரண் டுற்றகர மாகியன் பர்க்குதிய
மீதிதங் கப்ரபலமா
மேருவம் பொற்றனுவ தாகரன் கைக்கொணதி
வேணிநம் பர்க்குமகனுய்
வேல்கைகொண் டுக்ரமிகு சூரர்துண் டித்தமரில்
வீழமுன் றெட்டமுதலே
காரிவந் திக்கவவ னுயிரங் கட்கும் நிறை
காணரும் புத்ரியுடனே
கானமர்ந் திட்டவொரு மானணங் கைத்தழுவு
காதல்கொண் டுற்றவழகா

சிரிலங் கக்கவக கேதறுங் கப்பொனடி
தேடியன் பிற்பரவினேன்
சேவைதங் துக்ரமயின் மீதுவந் தெற்குதவு
தேவசெந்திற் கடவுளே. (1)

அருமாதவச் தெய்வமே சைவமணியே
யனந்தகல் யாணகுணமே
அண்டருல கும்புவன மும்புகழு தற்கொரு
வருட்செல்வ மானமுருகா
ஒருமா வுருக்கொண்டு வருசூரனைப் பண்டு
வுடலீறுறக் கீண்டிடும்
உக்ரவயி லாஞான சக்ரமயிலா யாவு
மொப்பற்கரும் பொருளதாய்
வருஞான சிவசோதி தருபால வமுதோதன்
மறைதேடு மதிகாரனே
வாகனே யானந்த யோகனே யன்னையுமை
மடிமீது விளையாடிடத்
திருவாய் வருஞ்செல்வ மேயென்னை யாட்கொண்ட
தெய்வமே யுனைநம்பினேன்
சேவைதங் துக்ரமயின் மீதுவந் தெற்குதவு
தேவசெந்திற் கடவுளே. (2)

ஆகார மெற்குனது பாதாரவிந்தமெனை
யாள்வதுன் கடமையென்றும்
அநுதினமு மெனதுமுறை யதனிலொரு வினுவெவனு
மணிசெவியி னுழையவிலையா
ஆகா யிருப்பதென் வர்மமா யாவென்ன
துரமா பார்மீதிலே
அற்குண மிகுத்தவொரு பித்தனை னுகின்
றுய்யதிரு வடியிரண்டுந்
தாதா வெனப்பற்று மாதவர்க் கினியனை
சாலோக முதனான்கையுந்
தந்தருள வந்தொளி சிறந்தசிவ ரூபமே
தமியேனை யாட்கொள்வதிற்

நீகாகு மாவருட் டேவ சேனாபதித்
தெய்வமே சைவமணியே
சேவைதந் தாக்ரமயின் மீதுவந் தெற்குதவு
தேவசெந்திற் கடவுளே. (3)

தந்தைதாய் குருவான யெங்கள்குல தெய்வமே
தமியேனுனக் கடிமையே
சாமிநீ யல்லாது வேறுகெதி யேதுநான்
சஞ்சலமடைந் தேனதுன்
சிந்தையறி யாதா யென்மீதுவா தா தினந்
தேடியன்புற் றிருகையாற்
சேவித் திறைஞ்சியும் பலதரஞ் சொல்லியுந்
திருவுள மிரங்கவிலையே
கந்தனே சிவகாமி மைந்தனே யீதென்ன
கலியுகத்தின் செய்கையா
கர்மமா வல்லதுன். வர்மமா நீயெனைக்
கைவிடுத னீதியலவே
செந்தமி ழிலக்கணந் தனைமுனிக் கருள்செய்த
• திவ்யசெந் திருவாயனே
சேவைதந் தாக்ரமயின் மீதுவந் தெற்குதவு
தேவசெந்திற் கடவுளே. (4)

அன்றலகை வசமான கீரன் கவிக்குமலை
யறவுடைத் தாள விலையா
அடர்மேரு தனிலேறி விழுவாவ விற்சென்ற
வருணாகிரி முன்புவந்து
பின்றரு ளளிக்கவிலை யாவமர ரோங்கவின்
ணைநின்று காக்கவிலையா
நீதனே சிவஞான போதனே யேழையென்
னேரில்வந் தாளவரிதா
தொண்டனு னென்றுனடி யண்டினே னின்றெனது
துன்பமாறும் படிக்குன்
துணைபுரிகு வதுமுனது கடமையிது தெரிகுவாய்
சுத்தனே சித்தர்போற் றுந்

தெண்டாயு தானினது பெருமைநான் சொல்வதோ
 சேடனுக்கு மரியதே
சேவைதந் துக்ரமயின் மீதுவந் தெற்குதவு
 தேவசெந் திற்கடவுளே. (5)

வயமேவு முக்ரவடி வேலவா பரமகுரு
 வடிவான ஞானபோதா
மலைராஜ னுக்கரிய மகளாயுதித்தவுமை
 மடிமீதிருந்த புதல்வா
சுயமா முகாசூர னைச்சமரில் வென்றகிங்
 காரகணபதி சோதரா
கருணைகரா வள்ளி தெய்வானை காதலா
 காமதகனன் புத்திரா
அயனாதி யமரர்கின் னரர்சித்தர் முனிவரும்
 அர்ச்சனை புரிந்தபாதா
அரகரா சரவணபவா கார்த்தி கேயசேவ
 ரறுமுகா சுப்ரமண்யா
ஜெயவிஜய கோதண்ட பாணிக்கு மருகமா
 சித்தசன் றன்மைத்துனு
சேவைதந் துக்ரமயின் மீதுவந் தெற்குதவு
 தேவசெந் திற்கடவுளே (6)

சிற்பர னுதற்பொறிக ளாகியே சரவணத்
 திகழ்தடமு தித்துமேலாந்
திருவுருவ மாகிவிளை யாடியும் பிரமனைச்
 சிறையிலிட்டுந் திறமையாய்
நற்பொருள் தனைப்பரம னுக்குற வுரைத்தமா
 ஞானஷண் முகனாகியும்
நாதனாகியுமமர போதனாகியும் வந்து
 நணிவுக்ர கிரவுஞ்சமா
வெற்பைப் பிளந்துமசு ராதிகளை வென்றமரர்
 மேவவின் னாடளித்தும்
வேண்டுமன் பர்க்குதவி யாகியும் புவிமீதில்
 மேலாய்விளங் கிடுதலாற்

செப்புதற் கரிதான தெய்வமே நின்பெருமை
சிறியனாற் பகரவெளிதோ
சேவைதந் துக்ரமயின் மீதுவந் தெற்குதவு
தேவசெந்திற் கடவுளே. (7)

அம்மைநீ யப்பனீ யாதார குருவும்நீ
அத்துவித மானபொருணீ
அடியும்நீ முடியும்நீ அருமறையு மேலான
வாறக் கரப்பொருளும்நீ
மெய்மை யெப்பொருளுக்கு மிறையா யவற்றுளே
மேவிநிற் கின்றவனும் நீ
வேதனீ வேதாந்த நாதனீ வுக்ரவடி
வேலாயுதக் கடவுணீ
தொன்மைசே ராவினன் குடிபரங்கிரி குன்று
தோரூடல் திருவேரகந்
துய்யசீ ரலைவா யருஞ்சோலை மலையென்று
சொல்லும்நற் றலமீதிலே
செம்மையாய் வீற்றிருந் தன்பர்களை யாட்கொண்ட
தெய்வமே யுனைநம்பினேன்
சேவைதந் துக்ரமயின் மீதுவந் தெற்குதவு
தேவசெந்திற் கடவுளே. (8)

புவிமீதி னிற்கொடிய பாவியென நாமம்
பொருந்தா மனுஞ்சிந்தையிற்
புல்லறிவு மறமனும் நன்னெறி விளங்கும்நின்
பொன்னடி தனைப்போற்றவுந்
தவியா திருக்கநின் னருணிறையவும் ஞான
சாத்வீக குணமோங்கவும்
சங்கடந் தருவறுமை யனுகாமலும் பெரிய
தமனியக்கிரியை யொத்த
குவிமா முலைக்கணிகை யவராசை யற்றநிக
கொலைபாவ முற்றுமறவுங்
குறைநீங்க வும்மெனது முறையோங்க வும்மடியர்
கூட்டத்திலே யொழுகவும

சிவமாத வச்செல்வ மேகருணை வைத்துதவி
செய்வதுன் கடமையென்றேன்
சேவைதந் தாக்ரமயின் மீதுவந் தெற்குதவு
தேவசெந்திற் கடவுளே. (9)

அருளிலங் குங்கந்த கிரிமேரு கிரிமயிலை
அருணாசலஞ் சிகண்டி
அழகுபொழி திருவேங் கடந்திருத் தணிகைசிற்
றம்பலம் பொதிகைவேளூர்
தெருண்மிகுங் குமரகோட் டங்கொடுமளூர்கதிரை
திருநீல கிரிமயூரம்
சித்தர்மலை தோகைமலை மேலாம் விராலிமலை
சென்னிமலை யுஞ்சிறந்த
பெருமைதங் கியநற் கடம்பவன மெட்டிகுடி
பேறான சிக்கலென்று
பேசுமித் தலமெலா மேவிவிளை யாடுமுன்
பெருமையான் சொல்லவெளிதோ
திருவிளங் கமராரு மறைமுனிவ ரேற்றிடுஞ்
செந்தா மரைப்பாதனே
சேவைதந் தாக்ரமயின் மீதுவந் தெற்குதவு
தேவசெந்திற் கடவுளே. (10)

# ஸ்ரீ முருகானந்த பஜனாமிர்தக் கீர்த்தனங்கள்.

## விநாயகர் துதி.

### நேரிசை வெண்பா.

வித்தகமெஞ் ஞானப் பொருளாகும் வேற்குகன்மேற்
சித்தமகிழ் கீர்த்தனங்கள் சேர்த்திசைக்க—முத்தர்தொழும்
போரானை ஐங்கரப் பெம்மானை யோர்கோட்டு
வாரானை யைப்போற்றுவாம்.

பாலராம வனயனே (என்ற மெட்டு)

இராகம்: தோடி, தாளம்: ரூபகம்

### பல்லவி மகுடம்

அத்திமுகத் தெய்வமே—எனை
யாதரி வேத விநோதமூலாதர (அத்)

அன்பென்றுந் துன்றுந்தொண்
டன்கண் டின்பங்கொண்ட (அத்)

அங்கயற்க ணம்மை சேயே
யுங்கணேசனை தூய (அத்)

அந்திச்சிரு மேனியனருள்
தொந்திப்பெருமா னெனவரும் (அத்)

அருநெறிதரு மறைமுடி வதி
லொருதிருநட மிடு குண பதி (அத்)

ஆதியர்ன வேதஞான சோதிரூப
நீதிமய யன்றிமோன நாதனை (அத்)

### அநுபல்லவி.

பக்தியுடன் றொழப் பாரினில் மாக்ஷி
பாலித்திடும் பர மானந்தக் காக்ஷி
சுத்த மனத்தினிற் றோன்றுமே ரூக்ஷி
துங்கந்தங்குந்தொண்டர்ச் செங்குமுண்டே சாக்ஷி (அத்).

### சரணம்.

சித்திக்கணபதியே—திவ்ய
தேசு நிறைதவ பூஜிதனே ஞான (சித்)

முத்திக்கொரு பொருளா யமர்ந்தோனே
மோதகப்பிரிய கணேச பிரானே
யெத்தினமு முனை யான் மறவேனே
யென்றன் சிந்தைக்கின்பப் பைந்தமிழ் தாகோனே (அத்)

கந்த மலர்ப் பாதனே—அருள்
காக்ஷி யிவ்வேளை கடாக்ஷி வரதனே (கந்)
அந்தரிசாமளை யம்பிகை பாலா
ஐந்து கரங்கொண்ட வாரணமூலா
சந்ததஞ் சண்முகன் றமிட் கனுகூலா
தருணமெனைப்பாருந் தரணியின் மேலா (அத்)

## சரஸ்வதி கீதம்.

சுஜனஜீவன (என்ற மெட்டு)

### பல்லவி.

கமல வாணியாம் வேதன் கன்ய ராணியாம் (கமல)

### அநுபல்லவி.

மலர்க் காதறுங்கொடை தாவடந்தனை மார்பிற்பூணியாம் (சீதகம)

### சரணம்

விமலனுதி யோர்கொண்டாடும் வேதபாரதி
சமரச ஞானி மேலாந் தத்வபூரணி
சந்ததம் திருப் பைந்தமிணிதி தந்தருள்செய்நீ (சீதகமல)

வெண்படிக மணையமேனி வித்தகி நீயாம்
கம்பினேன் வாராய் எந்த னுவினிற் சேராய்
நாதநூபுர பாதமேகெதி நீ தயை கூராய் (சீதகமல)

சிந்தையன்பாய்ப் போற்றுஞ்சண்முகம் செஞ்சொற்பாடி
வந்துநேயமா மதுர வாக்கருளம்மா [னேன்
வாழ்த்தினேனுன்றன் கீர்த்தியேயென்று ஞ் சீர்த்தியாமம்மா
(சீதகமல)

# ஸ்ரீ முருகக்கடவுள் துதி.

## விருத்தம்.

தார்பூத்த திருமுகங்க ளோராறுங் கமலகர
 தலமீ ராறுஞ்
சீர்பூத்த மணித்தோளுங் கருணைவிழி யகன்மார்புந்
 திரண்முன் னூலுங்
கார்பூத்த செஞ்சேவற் சிகியேறுஞ் சிறுசதங்கைக்
 காலும் வேலும்
பார்பூத்த மாதிருவர் பாகமுமாய்த் திகழ்பொருளைப்
 பணிந்து வாழ்வாம்.

வர வா கஜமுகனே நீ—என்றமெட்டு

இராக-காப்பி தாளம்-ஆதி.

பல்லவி

வேலா ஆணை புரிவாய்நீ விகசிதவை (வே)

அநுபல்லவி

சீலா கனவுதார மேலா திருமயூர (வே)

சரணங்கள்

கால காலனருளும் பாலா வள்ளிதெய்வானை
கோலாகலனைநாதா மூலப்ரணவபோதா
முத்தர் தினம் நத்தவரு ளுத்தமனே யித்தருணம் (வே)

பண்டுசூரர்குலத்தை வென்றுதுயரொழித்த
தெண்டாயுதக்கையனே அண்டர்போற்றும் பூமானே
அஞ்செயெலன இன்சொலரு ள்தஞ்சமுனைக் கெஞ்சினேனே
(வே)

கார்த்திகேய முருகா கீர்த்தியருளுங்குகா
பூர்த்தியுடனின் புகழ் சீர்த்திசொல்லுஞ் சண்முகம்
செந்தமிழைச் சந்தமொடு சிந்தை செய்ய இந்தவேளை (வே)

## நேக்நங்கி மேரே (என்றமெட்டில் மகுடம்)

இராகம்: இந்துஸ்தான் தோடி, தாளம்: ஆதி.

### பல்லவி.

கந்தனே நாளும் — கானத்தோகயி னடுமிடு ஞான — (க)

### அநுபல்லவி.

வந்தெனை நீகா — மகிழும் வைபோகா
வள்ளிகுஞ்சரி நேடு — மாசுகா வுனை
வந்தித்திடவரு — ளுந்தற்பரமா — (கந்)

சூரர்கள் காலா — சுடர்வடிவேலா
சுப்ரமண்யவிசாக — சுந்தராதொண்டர்
தூற்றிப்பனிமலர் — சாற்றிப்புகழுமா — (கந்)

நாரியர் பாலே — நகுமனதாலே
நலமறியாமலே — நானுனைத்தேன்குரு
நாதத்திருமுறை — போதித்தருள்வாய் — (கந்)

பத்தர்கள் வாழி — பாரினீடூழி
பாலன்சண்முகன்றமிழ் — பாடினேன்சந்தப்
பாக்குற்றதிபுக — ழோங்கத்திருவருட் — (கந்)

## அம்மா மதுரை மீனுக்ஷி (என்றமெட்டில் பின் மகுடம்)

இராகம்: தேசிகதோடி. தாளம்: ஆதி.

### கண்ணிகள்.

தேவா தென்பரங்கிரி வேலா — வானோர்
சேனுபதியே வனுகூலா — (சாமி தேவா)
சிந்தையிலுனைத் துதிக்கச்
சந்ததமெனக்கருள் செய் மேலா
யெனக்கருள் செய் மேலா
யெனக்கருள் செய் மேலா
யெனக்கருள் செய் மேலா

எனைக் காவா திருப்பதென் சீமானே திருக்
கண்பாரும் நான்சிறி யேனை (எனை)
கலசத்தொரு முனிக்கு
நலசற்குருபரவேலோனே
குருபரவேலோனே
குருபரவேலோனே
குருபரவேலோனே

கங்கா தரனருள் குமாரா
கந்தா குஞ்சரிமகிழ் சீரா (சாமி கங்)
கானமர் செந்தினைக்குற
மானையுந்தழுவிய வொய்யாரா
தழுவிய வொய்யாரா
தழுவிய வொய்யாரா
தழுவிய வொய்யாரா

சிங்கார மாமயில் வினோதா செஞ்
சேவற்கொடியுடைய நீதா (திருச்சிங்)
தீரனே வுனைத்துதிக்க
கீரனுக்கருள் புரிந்த நாதா
அருள் புரிந்த நாதா
அருள் புரிந்த நாதா
அருள் புரிந்த நாதா

பூமியெங்கும் புகழ் செந்தூரா சிவ
போதமெனு மதிவுதாரா (இந்தப்பூமி)
மெய்ப்பொருள் சொலெனவயனைச்
சிரசிற்குட்டியகன வீரா
குட்டியகன வீரா
குட்டியகன வீரா
குட்டியகன வீரா

சாமி வுன்றனை நம்பினேனே கவிச்:
சண்முகன் றமிழ்க்கருள் கோனே (எங்கள் சாமி)

கருணைமதிலுதவுங்
கருணைக்கடைக்க ணருள்தானே
கடைக்கணருள்தானே
கடைக்கணருள்தானே
கடைக்கணருள்தானே. (எங்கள்சா)

ராமா உன் பாதம் நம்பினேன் ரவிகுல ஸ்ரீ (என்றமெட்டு)

இராகம்: மத்தியமாவதி, தாளம்: ஆதி.

பல்லவி.

ஞானவரத சண்முகா நானுனை நம்பினேன் (ஞா)

அநுபல்லவி.

தீனதயாளனென்று தேடினேன் தினம்நின்று
திருத்தமாகிய சேவையளித்தென்
வருத்தமே தவிர் வாழ்வை யெனக்கருள் (ஞா)
கார்த்திகேயா மிகுந்த கீர்த்திவேலனே கந்தா
கனத்தமாமயி னடத்துசேவக
கருணைத்திருமுக மகிழ்வுற்றருள்புரி (ஞா)
வள்ளிமயிற்பாகா வர்மம்பென்மீதாகா
மறைமுனிவரரிமை யவர்புகழ் வொரு சர
வணத்தி லுதித்த மிகுத்த மகத்வ (ஞா)
முக்கண்ணனின் வாழ்வே முதமறையின் கோவே
முக்தித் திருநெறி பக்தர்க்குதவு
குணத்தைச் சண்முக னக்திப் பாடிய. (ஞா)

## மங்கள வாழ்த்து.

பஜனைசெய்வாய் மனமே (என்றமெட்டு)

(இராகம்:பிலஹரி, தாளம்:ரூபகம்)

### பல்லவி.

நித்ய மங்கள மே

### அனுபல்லவி.

நேருந் தெய்வசீ ராரும் ஆரணம் (நித்)

### சரணம்.

தத்வகாரண சாஸ்திரஞானம்
சகலபுவன ஜீவர்கள் த்யானம் (நித்)

வளமையாந்தெய்வ போத பாதம்
வாழ்த்துஞ்சண்முக தாசன் கீதம் (நித்)